# 01. ஸ்ரீ சித்திர வேலாயுதர் திருக்கோவில் திருக்கோவில்

கிழக்கிலங்கையின் வரலாறு படைத்த கோவில்களுள் முதன்மையானது திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயமாகும். இது 2000 ஆண்டுகளுக்கு மேல் வரலாறு உள்ள பழைமையான கோவிலாகும். முதலாவது திருப்படைக்கோவில் (தேசத்துக் கோவில்) என்ற சிறப்புப் பெற்றது. பண்டய அரசர்களால் நிர்மாணிக்கப்பட்டு மானியங்களும் சீர்வரிசைகளும் வழங்கி அரவணைக்கப்பட்ட கோவில்களே திருப்படைக் கோவில்கள் என்று சிறப்புப் பெற்றன.

திருக்கோவிலின் வரலாற்றை இரண்டு கர்ண பரம்பரைக் கதைகள் ஆரம்பித்துவைக்கின்றன. ஒன்று இராவணேஸ்வரன் கதை, மற்றையது முருகனின் சூரசம்சாரக் கதை. திருக்கோவிலுக்கு எதிரே கடலுள் மூழ்கி உள்ள இராவணன் கோட்டை (இப்போதும் எச்சங்கள் தெரியும்) தான் இலங்காபுரியில் இராவண மன்னன் வாழ்ந்த கோட்டையாகும். தினமும் திருக்கோவிலுக்கு இராவணனும் அவனது மனைவியும் வந்து வழிபட்டு செல்வார்கள் என்பது ஒரு செய்தி, திருக்கோவிலில் முதலில் சிவன் கோவில்கள் தான் இருந்துள்ளது (சிவஞான சங்கரர் கோவில்). சிவபக்தனான இராவணன் வழிபாடும் இதை மெய்ப்பிக்கும். இப்போதும் அதிகாலைப் பூசை 'சிவ பூசை' என்றே அழைக்கப்படுகின்றது. பெறுமதியான கோவில்ச் சொத்துக்களைப் பாதுகாக்கும் பெட்டகம் 'சிவத்திரவியப் பெட்டகம்' என்றே அழைக்கப்படுகின்றது. மற்றையது சூரசம்ஹார இறுதி யுத்தத்தில் சூரனை இருகூறாகப் பிழந்த முருகப் பெருமானின் கைவேல் எதிரே இருந்த வாகூர மலையைப் பிழந்து தாமரைப் பொய்கைகளிலும் வங்காள விரிகுடாக் கடலிலும் நீராடி தொடக்குகள் கழித்த பின் கடலோரக் காட்டில் உள்ள வெள்ளை நாவல் மரத்தில் வடக்கு முகமாகச் சாய்ந்து நின்றது.



Digitized by noolaham.org

ஒளி தெறிக்கும் இந்தத் தங்க வேலாயுதத்தைக் கண்ணுற்ற வேடர்கள் கொத்துப் பந்தல் அமைத்து வழிபட்டனர். என்பது இரண்டாவது செய்தியாகும். இதுவரை நாகர் முனை என்ற பெயருடன் இருந்த ஊர், கந்தனின் பாணம் வந்து உறைந்ததில் இருந்து கந்தப்பாணத்துறை என்றும் வெண்ணாவல் பதி என்றும் அழைக்கபடலாயிற்று. (இந்தியாவிலிருந்து தமிழர்களின் 1ம், 2ம், 3ம் படையெடுப்புக்கள் கி.மு 103 இலிருந்து கி.பி 5ம் நூற்றாண்டு வரை சோழர் பாண்டியர் என்று தொடர்ந்தது.) கி.மு 103ல் இங்கு வந்த பாண்டியர்கள். முருகனின் தங்க வேல் தங்கிய பதியைக் கேள்வியுற்று அதன் மகிமையையும் உணர்ந்து கொண்டனர். நிரந்தரமாக முருகனுக்கு ஆலயம் அமைக்க முடிவு செய்தனர். தென் இந்தியாவில் இருந்து கோவில் கட்டும் பணிக்குரியவர்களை வரவைத்து கட்டடப்பணிகளை ஆரம்பித்தனர். வேல் இருந்த திசைக்கமைய வடக்கு முகமாகவே கொத்துப் பந்தல் போடப்பட்டிருந்தது. கடற்கரையைப் பார்த்தவாறு கிழக்கு முகமாக நிரந்தரமான கோவிலை கட்டினால் சிறப்பாக இருக்கும் என தலைமை மேஸ்த்திரி நினைத்தான். அடுத்த நாள் நினைத்தவாறே கோவில் தானாகவே கிழக்கு முகமாக வங்கக் கடலைப் பார்த்தவாறு திரும்பி இருந்தது. பாண்டியர்கள் நினைத்தவாறு கிழக்கைப் பார்க்கும் பெருங்கோவிலாக கட்டி முடித்தனர். திரும்பிய கோவில் திருக்கோவில் என்ற பெயருடன் இன்றுவரை அழைக்கப்படுகின்றது. ஊரின் பெயரும் திருக்கோவிலானது.

கோவில்த் திருப்பணிக்கும் கோவிலின் உள்வேலை வெளிவேலைகளுக்கும் 18 வகையான குடியினர் வரவழைக்கப்பட்டனர். இவர்களுடன் 17 சிறைக்குடிகளும் குடியமர்த்தப்பட்டனர். நாளடையில் கோவில் பராமரிப்பு குறைந்து அழியும் நிலையில் இருந்த போது கி.பி 8ம் ஆண்டில் அரசன் புவனேய கயபாகு பிரசன்னசித்துவுடன் நாகர் முனை என்னும் கந்தப் பாணத்துறைக்கு வந்து இறங்கினான். தனக்குப் புத்திரபாக்கியம் தரக்கூடிய தெய்வம் திருக்கோவில் சித்திரவேலன்தான்



Foundation.
ham.org

என்பதைக் கேள்வியுற்று சோழநாட்டில் இருந்து சிற்பிகளையும் கட்டடக்கலைஞர்களையும் வரவழைத்து புனர்நிர்மாணப்பணிகளைத் திறம்படச் செய்தான். இதனால் புத்திர பாக்கியமும் கிடைக்கப் பெற்று மகிழ்ந்தான். மகனுக்கு 'மனுநேயகயவாகு' என்ற பெயரையும் வைத்தான். இவனே 'எல்லாளன்' என்ற புகழ்பெற்ற தமிழ் மன்னனாகக் கருதப்படுகின்றது.. எல்லாளனது தாயாரின் பெயர் 'தம்பதிநல்லாள்' என்பதாகும். குடிநீருக்கும் பாசனத்துக்கும் என பல குளங்களை வெட்டியதுடன் பெரிய குளமொன்றுக்கு அருகேயுள்ள கிராமத்துக்கு தனது தாயின் பெயரைவைத்து 'தம்பதிவில்' என்று பெயரிட்டான். அப்பெயர் மருவி இப்போது தம்பிலுவில் எனவழங்கப்படுகிறது. கலிங்க குமரன் புவனேயகயவாகு பிரசன்னசித்து ஆகிய அரசர்கள் காலம் இப்பகுதியில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கவேண்டியவை இவர்களின் பசுமைப் புரட்சியினால் இப்பிரதேசத்தின் சுய நுகர்வு போக தாராளமான தானியங்கள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

திருக்கோவில் முருகனின் அருளால் பிறந்த மனுநேயகயவாகு மன்னனாகி திருக்கோவிலுக்கு ஏராளமான் சீர்வரிசைகளும் மானியங்களும் வழங்கி கோவிலை மேலும் சீர்படுத்தினான். கோவில்கள் அறப்பணி செய்யும் நிலையங்களாக மாற்றப்பட்டன.

கிராமம் தோறும் ஊர்க் குளங்கள் அமைக்கப்பட்டன. வயல் நிலங்களுக்கு நீர் பாயக்கூடிய அளவு துரிசி வைத்த பாசனங்குளங்கள் அமைக்கப்பட்டன. மாஹோன் வருகைக்குப் பின் கலிங்க வெள்ளாளர் மேலும் 7 குடிகளாக வகுக்கப்பட்டனர். அதில் முதல் மூன்று குடிகளான கண்டங்குடி, சுருவிலிகுடி, கட்டப்பத்தான் குடி (சங்கரப்பத்தான்குடி) யினர் திருக்கோவில் சித்தி வேலாயுதன் கோவிலிலும், தம்பிலுவில் கண்ணகி அம்மன் கோவிலும் சேவைக்கு அமர்த்தப்பட்டனர். அவர்கள் குடியிருக்க கோரைக்களப்பு, சங்கமன்கண்டிப் பகுதி ஒதுக்கப்பட்டது.



Digitized by noolaham.org

பூசைக்காக வீரசைவர்களான சங்கமர்களும் தம்பட்டர்களும் நியமிக்ககப்பட்டனர், தம்பட்டர்களின் குடியிருப்புகள் தம்பட்டை என அழைக்கப்ட்டது. காலப்போக்கில் வீரசைவரான சங்கம குருக்களுக்குப் பதிலாக சோழனின் செல்வாக்கினால் வேதியரின் ஆகம நெறிகளுக்கு உட்பட்ட பிராமணர்களே பூசை செய்யத் தொடங்கினர். திருக்கோவிலுக்கு இரு பிராமணப் பெண்களைக் கொண்டுவந்தமை பற்றிய கதையும் இப்பிரதேசத்தில் கர்ண பரம்பரையாய் உள்ளது. பொன் தேங்காய் ஒன்றை ஒரு வண்ணானுக்குச் சன்மானமாகக் கொடுத்து அக்கா தங்கையான இரு பிராமணச் சிறுமிகளை மாராப்புள் வைத்துக் கடத்தி வந்த செய்திதான் அது. அதில் ஒருவரின் பரம்பரை திருக்கோவிலிலும் அடுத்த பெண்ணின் தலைமுறைகள் தம்பிலுவிலிலும் இருப்பதாக கருதப்படுகின்றது. தம்பிலுவில் - திருக்கோவில் கிராமங்களை அக்கா – தங்கை ஊர் என அழைக்கும் வழக்கு இப்போதும் உண்டு.

"பண்டுமுறை தவறாமல் எழுகுடியாய்ப் பகுதித்தீசர் பணிபுரியப்பரவணியாய் அண்டர் தமைச் சாட்சி வைத்து தத்தம் செய்தான் மாஹோன்" என்ற கல்வெட்டுப் பட்டயம் மாஹோனின் நிர்வாகத் திறனை எடுத்துக் காட்டுகின்றது. இலங்கை சுதந்திரம் அடையும் வரை மாஹோனின் வன்னிமையும் சட்டதிட்டங்களுமே மேலோங்கி இருந்தன. கலிங்க மன்னர்களின் வாரிசுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் நிர்வாகச் செயற்பாடுகளை அவர்களின் தாய்வழித் தலைமுறைகளான பூபால கோத்திர வன்னியப் படையாட்சியரிடமே ஒப்படைத்திருந்தனர். இந்த வன்னியர் உடையார் நிலைமை, போடி முறைகளும் சுதந்திரம் வரை தொடர்ந்தன. மூவேந்தர் காலத்துக் கட்டடக் கலையும், நிர்வாக முறைகளும் கலந்த கலவையாகவே திருக்கோவில் கட்டடமும் நிர்வாகமும் உள்ளன.



Foundation.
ham.org

மூவேந்தர் காலத்துக் குடிகளான நாயர், பிள்ளை, காராளர், ஆகிய தென் இந்தியக் குடிகளும் இங்கு இருந்த ஆதிக்குடிகளான இராவணன் - மண்டோதரியின் வாரிசுகளான இயக்கர்களும் (வேடர்) நாகர்களும் கலப்புற்ற குடிகளையே இப்பிரதேச மக்களாகக் கருதலாம். பாண்டியர்கால 2ம் சிவன் கோவில் போன்றே திருக்கோவிலும் கருவறை - இடைகழி – அர்த்தமண்டபம் ஆகிய முப்பிரிவுகளாக உள்ளன. காலத்துக் காலம் ஏற்படும் தென் இந்தியப் படையெடுப்புக்களாலும் இப்பிரதேசத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கோவில் வளர்ச்சிக்கான மானியங்'களாக சுமார் 356.5 ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 120 ஏக்கர் கோவில் ஊழியருக்கானது. இதை விட சிவத்திரவியங்களாக தங்கம், வெள்ளியிலான பொருட்களும், நவரெத்தின மாலைகளும், பட்டுப் பீதாம்பரங்களும் கோவில் சொத்தாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் "இச் சொத்துக்களை 'அசிதம்' (அபகரித்தல்) செய்பவர்கள் கெங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்தைக் கொள்ளக் கடவர்" என்ற வாசகம் படைத்த குழிக்கல் வெட்டும் இங்கு உள்ளது. ஸ்ரீ விஜயபாகுத் தேவர் என்னும் மாஹோனால் இது பொறிக்கப்பட்டது. இதை விட 1803ம் ஆண்டு எழுதப்பட்ட ஓலைச் சுவட்டில் கோவில் திருக்கவடா (பெட்டகம்) உடைத்துக் களவு போனது முதல் அவை மீளக் கிடைத்தமை பற்றியும் எழுதப்பட்டுள்ளது. இக்கொள்ளை நடந்த போது வையாளிப் போடியார் நிலைமைப் போடியாகக் கடமையாற்றினார். கிழக்குமுகமாகத் திரும்பிய கோயில் என்ற அற்புதத்துடன் மேலும் பல அற்புதங்களை வரிசைப்படுத்தலாம். அதில் தங்கம்மா என்னும் 80 வயதுப் பாட்டி 7வயது சிறுமியாக மாறிய அற்புதத்தை பார்ப்போம். 7வயது சிறுமியாக இருந்தபோதே ஆலயத்தில் எட்டுப்பேருடன் தாளம் போட்டுக்கொண்டு இருந்தாள் தங்கம்மா. படிப்படியாகக் கோயில் தொண்டூழியங்கள் பலவற்றையும் சிறப்பாகச் செய்து வந்தாள். வயது முதிச்சியின் காரணமாகக் தொண்டு செய்வதில் தொய்வு ஏற்பட்டது.



Digitized by noolaham.org

கோவில் நிர்வாகம் 80 வயதான தங்கம்மா பாட்டியை திருப்பணியில் இருந்து விலக்கி வைத்தார்கள். இதைப் பொறுக்கமுடியாத பாட்டி பலிபீடத்துக்கு முன்னால் அழுது புலம்பியவாறே மூர்ச்சை ஆகினாள். கண்விழித்தபோது தான் ஆரம்பத்தில் பணிக்குச் சேர்ந்த சிறுமியாகவே இருப்பதைக் கண்டு முருகப் பெருமானின் கருணையை எண்ணி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள் இதைக் கண்ணுற்ற நிர்வாகத்தினர் தங்கம்மாவிற்கு தொடர்ந்து பணியாற்றச் சந்தர்ப்பம் அளித்தனர். இதைவிட சுனாமி என்னும் ஆழிப்பேரலை அடித்தபோது கோவில் சிகரத்தையே மூடியவாறு அலை அடித்தபோதும் பூசைத் திரவியங்கள் யாவும் எந்த சேதாரமும் இன்றி அவ்வாறே இருந்ததையும், கற்பக் கிரக சுவாமியின் அலங்காரங்களோ சந்தன குங்குமங்களோ கரையாது 'அப்படியே இருந்ததையும் அண்மைக்கால அற்புதமாகக் கொள்ளலாம். மொத்தத்தில் உள்ளூர் யுத்தத்திலும், சுனாமிப் பேரலையிலும் இருந்து தம்மைக் காப்பாற்றியது முருகப் பெருமானே என்று மக்கள் நன்றி சொல்வதுடன், யுத்தத்தில் உயிர் இழந்தவர்களை முத்தியடைந்தவர்களாகவும், சுனாமியில் உயிர் துறந்தவர்களை ஜலசமாதி என்னும் பிறப்பற்ற நிலை அடைந்த புண்ணிய ஆத்மாக்களாகவும் எண்ணி ஆறுதல் அடைகிறார்கள். மூர்த்தியாகிய ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமியும், வரலாறு பெற்ற கோவிலாக மூன்று வீதிகளைக் கொண்ட தலமாகவும்,எதிரே வங்காள விரிகுடாவைத் தீர்த்தக் கடலாகவும் கொண்டதாக இக் கோவில் காட்சி அளிக்கிறது. இராஜ கோபுரம் கட்டும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது தேரோட்டம் பற்றி வரலாற்றில் ( 1870 ) குறிக்கப்பட்டிருந்தாலும் பழைய தேர் இருந்ததற்கு ஆதாரம் எதுவும் காணப்படவில்லை. கர்ண பரம்பரையாக பழைய தேர் கடற்கோளால் நீருள் அமிழ்ந்துவிட்டதாக கூறுகின்றனர். தேர் இல்லாத குறையைப் போக்க உள்ளூர் மரச்சிற்பக் கலைஞர்களைக் கொண்டு அண்மையில் (கி.பி 2007) இரண்டு தேர்கள் நவீன முறைப்படி இலகுவில் நகர்த்தக் கூடியதாக உருவாக்கப்பட்டு' தேரோட்டமும் நடைபெற்று வருகின்றது.



Foundation
ham.org

சிறிய பிள்ளையார்த் தேரை பெண்களும், பெரிய முருகப்பெருமானின் தேரை ஆண்களும் வடம் பிடித்து சமாந்தரமாக இழுத்துச் செல்லும் காட்சி கண்களை பறிக்கும். அரோஹரா ஓசை காதை நிறைக்கும். மஹோற்சவமாக ஆடி அமாவாசை தீர்த்தத் திருவிழாவைக் கூறலாம். இதை விட நித்திய பூசையாக அதிகாலை அபிசேகப் பூசை "சிவபூசை" என்ற பெயரில் அதி காலை 5 மணிக்கு நடைபெறும். தொடர்ந்து காலை, மதியம், மாலை என மூன்று வேளைப் பூசைகள் தவறாமல் நடை பெறுகின்றன். நைமித்திய பூசைகளாக சகல விசேட தினங்களிலும் சிறப்புப் பூசைகள் நடைபெறும். இதை விட சிவராத்திரி, நவராத்திரி, பிள்ளையார் நோன்பு, கௌரிவிரதம், கந்தசஷ்டி விரதத்தோடு சூரன் போரும் வெகுவிமர்சையாக நடை பெறும். கந்தசஷ்டி விரத நாட்களில் கந்தபுராணம் பாடப்பட்டு அதன் கருத்தை (பயன்) உடனுக்குடன் சொல்லும் மரபு இப்போதும் உண்டு. ஆடி அமாவாசை மகோற்சவம் 18 நாட்களுக்கு முன்னரே கொடியேற்றத்தோடு ஆரம்பிக்கும் திருவிழாக்களின் தொகை படிப்படியாக அதிகரிக்கப்பட்டு இப்போது 17 நாட்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 18ம் நாள் கடலில் தீர்த்தம் ஆடுதலுடன் நிறைவடையும். இந்த 18 நாட்களும் ஊரே விழாக்கோலம் கொண்டிருக்கும். சந்திக்கு ,சந்தி பந்தல் அமைத்து அலங்காரம் செய்திருப்பார்கள். பலவகையான காவடி ஆட்டங்களுடனும் கரகாட்டம், கும்மி, கோலாட்டங்களுடனும் ஊர் கலகலப்பாக இருக்கும். தீர்த்தோற்சவத்திற்கு அடுத்தநாள் பூங்காவனத் திருவிழாவும், 20ம் நாள் வைரவ பூசையும் 1990 குடமுழுக்குக்குப் பின் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டன. அங்கப்பிரதட்சணை செய்வோர், கற்பூரச்சட்டி எடுப்போர் அரோகரா ஒலியில் திளைத்திருப்பார்கள். மேளதாள தவில் நாதஸ்வரக் கச்சேரிகள், ஆன்மீகச் சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள் என்பன இனிய நிகழ்வுகளாக அமையும். மேடை அமைத்து நாட்டுக்கூத்து விடியவிடிய ஆடுதல், மற்றும் வம்மி மரத்தில் ஊஞ்சல்களில் ஆடவர்-பெண்கள் வெவ்வேறாகப் பாடி ஆடும் காட்சிகள் எல்லாம் இப்போது அருகி விட்டது.



Digitized by
noolaham.org

போர்த் தேங்காய் உடைத்தல் போட்டி வடசேரி தென்சேரி என்று நடைபெறுகின்றது. அம்மனுக்கு சர்க்கரை அமுது வைக்கும் நிகழ்ச்சியும் அதில் தெய்வம் (பேய்) ஆடுதல், கட்டுச்சொல்லுதல், சவுக்கால் அடித்தல் போன்ற நிகழ்வுகளும் வருடா வருடம் வம்மி மர நிழலில் நடைபெறும். இக்கோவிலின் நிர்வாகச் சிக்கல் சொல்லில் அடங்காது. கரவாகுப்பற்று, சம்மாந்துறைப்பற்று, பாணமைப்பற்று, அக்கரைப்பற்றுகளில் வாழும் செல்வாக்கு மிக்க குடிகளான பணிக்கனார் குடியினர் முதல் நிலையில் இருந்தவர்களே தலைமை பொறுப்பை ஏற்றிருந்தனர். இந்த நிர்வாக முறையை எதிர்மன்னசிங்கன் என்ற சேரத்துப் பணிக்கனார் வம்சத்தைச் சேர்ந்த சிற்றரசர் காலம் எனக் கூறும் வாரலாறும் உண்டு. தலைவர் கரவாகுப்பற்று பணிக்கனார் குடியிலும், செயலாளரும் கணக்கப்பிள்ளையும் அக்கரைப்பற்று மழுவரசன் குடியிலும், வண்ணக்கரும் பொருளாளரும் கண்டங்குடியிலும் இருந்து தெரிவாகவேண்டும் எனவும், மட்டக்களப்பிலிருந்து உகந்தை வரையுள்ள கரையோரக் கிராமங்களுக்குத் தலா ஒருவராக வட்டார பிரதிநிதிகளும் தெரிவாக வேண்டும் என்பதும் விதி. 1980 இல் சாசன விதிகளுடன் உபவிதியாக திருக்கோவிலில் இருந்து செயலாளர் தெரிவாக வேண்டும் எனவும், அக்கரைப்பற்றில் இதுவரை இருந்த செயலாளர் பதவி உப தலைவர் என மாற்றமடைய வேண்டும் என்றும் சேர்க்கப்பட்டது. இந்த நிர்வாகசபை 6 பேரும் வட்டாரப் பிரதிநிதிகளும் சேர்ந்து அதிகாரசபை என அழைக்கப்படும். இவ்வாறு பலமைல்கள் தொலைவுடைய பல ஊர்களையும் சேர்ந்தவர்கள் இந்தக்கோவிலின் பஞ்சாயத்தாராக இருப்பதால் நிர்வாக உறுப்பினரிடையே தொடர்பாடல் சந்திப்புக்கள் குறைவாகவே உள்ளன. குறிப்பாக இக்கோவிலின் அருகில் உள்ள திருக்கோவில் தம்பிலுவில் மக்களின் பிரதி நிதித்துவமும் மிக குறைவாகவும் உள்ளன. இதனால் பெரும்பாலும் மகோற்சவ காலங்களில் மாத்திரம் இவர்கள் கூடி முடிவெடுக்கும் நிலை உள்ளது. தலைவர், உபதலைவர், தனாதிகாரி, வண்ணக்கர், கணக்கப்பிள்ளை போன்ற நிர்வாகத்தார் அடிக்கடி சந்தித்து ஆலோசனை செய்யக்கூடிய வாய்ப்புக்களை விருத்தி செய்து கொண்டால்,



Foundation.
ham.org

கோவிற் பணியாளர்களின் உட்பூசல்கள், கோவில் சொத்துக்கள் பராமரிப்பு, மற்றும் கோவிற் காணிகளின் பிரச்சனைகள் யாவும் சுமுகமாகத் தீர வழி பிறக்கும். தற்போது கூட கோவில் நிர்வாகத்தைச் செயற்பட விடாது நீதிமன்றம் மூலம் தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது கோவில் வங்கிக் கணக்குகள் முடங்கிக் கிடக்கின்றன. பெறுமதியான ஆபரணப் பெட்டியின் திறவு கோல்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தடையாணை பெற்றவர்கள் முன்னாள் நிர்வாகிகள் என்பது குறிப்பிடத்தக்கது. அண்மையில் எதிர் அணியினரின் எதிர்ப்பையும் மீறி கோவிலின் குடமுழுக்குக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியதையும் குறிப்பிடலாம். பகை மறந்து, விட்டுக் கொடுத்து பலன் கருதாப் பணி செய்து உயர்வோமாக. F.X.E. நடராஜா, V.S. கந்தையா, K. தங்கேஸ்வரி, வெல்லவூர்க் கோபால், K.T. செல்வராசுகோபால், S. P. கனகசபாபதி போன்ற வரலாற்றாசிரியர்களது திருக்கோவில் சம்பந்மான வரலாற்றுக் குறிப்புகளும், முன்னாள் தர்மகர்த்தா திரு.த.மகேந்திராவின் "திருக்கோவில் திருத்தலம்" என்ற கட்டுரையும் இக் கைநூலுக்கு அடிப்படையாக இருந்தன. திருக்கோவில் கவிராயர் சற்குணச்செட்டியாரின் பக்தி பாடல்களும், தம்பிலுவிலைச் சேர்ந்த வில்லியம்பிள்ளை (மூத்ததம்பி) அவர்களின் திருக்கோவில் ஊஞ்சல்பாடலும், பதிகமும், சங்கீத பூசணம் திரு.சி.கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்டு கோவிலூர் செல்வராஜனால் தாயாரித்து வெளியிட்ப்பட்ட திருக்கோவில் முருகன் பக்திப் பாடல்களும், சிவஸ்ரீ லோகநாதக் குருக்களின் தல புராணமும், திருக்கோவில் இரா.தெய்வராஜனால் எழுதப்பட்ட சித்தரவேலாயுதன் திருப்பள்ளி எழுச்சி மற்றும் காவடிப் பாடல்களும் கும்மிப் பாடல்களும் என்றும் திருக்கோவிலின் வரலாற்றுச் சிறப்பையும், முருகன் கருணையையும் பறை சாற்றிக் கொண்டே இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. புகழ் பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமியின் வரலாற்றை இயன்றவரை சுருக்கமாகவும் மெய்த்தன்மை குறையாமலும் எழுத வைத்த எம் பெருமான் சித்திரவேலாயுத சுவாமியின் பொற்பாத கமலத்திற்கு இதைச் சமர்ப்பித்து நிறைவு செய்கிறேன்.

"ஓம் சரவண பவாய நமக"



*-*-*-*

Digitized by noolaham.o

